
# கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை வேத பாடசாலை

நிலை 1A　　பாடம் - 1　　தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தார்

**(ஜெபம்)**　உலகம் இவ்வளவு இனிமையாக
இருப்பதற்கு மிக நன்றி.
நாங்கள் உண்ணும் உணவுக்காக மிக நன்றி.
பறவைகளின் பாட்டைக் கேட்பதற்காக மிக நன்றி.
இவைகளை எல்லாம் கொடுத்த தேவனுக்கு
மிக, மிக நன்றி (ஆமென்).

ஆதியிலே பூமியானது இருளும் வெறுமையுமாய் இருந்தது. தேவன் உலகத்தை மிக அழகாக சிருஷ்டித்தார். முதலில் வெளிச்சத்தை உண்டாக்கினார். அதனால் நமக்குப் பகலும், இரவும் கிடைத்தது. தேவன் வானத்தையும் சமுத்திரத்தையும் உண்டாக்கினார். தேவன் பூமியின் மேல் புல், பூண்டு, பூக்கள், மரங்களை உண்டாக்கினார். அவர் பூமியை அழகாக்கினார். பகலில் சூரியனும், இரவில் நிலவும் பிரகாசித்தது. பின்பு தேவன் நீந்தும் ஜீவஜந்துக்களையும், பறக்கும் பறவைகளையும் சிருஷ்டித்தார். தேவன் காட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகளையும் சிறிதும், பெரிதுமாகச் சிருஷ்டித்தார். கடைசியில் தேவன் மனிதனைச் சிருஷ்டித்து அவனுக்கு ஆதாம் என்று பெயரிட்டார். எல்லா இடமும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. தேவன் தம்முடைய கிரியையெல்லாம் முடிந்தப் பின்பு அதைக் கண்டு ஆனந்தித்து ஓய்ந்திருந்தார்.



நிலை 1A வீட்டுப் பாடம் - 1 தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தார்

பெயர் ..................................................................................................

தேவன் உன்னை சிருஷ்டித்தார்.

உன்னை நீயே சித்தரித்துப்பார்.


கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை - 1A பாடம் - 2 நோவா மற்றும் ஜலப்பிரளயம்

**(ஜெபம்)** அன்புள்ள தேவனே, நாங்கள் நல்ல பிள்ளைகளாக இருக்க தயவு செய்து உதவி செய்யும். ஆமென்.

தேவன் உலகத்தைச் சிருஷ்டித்து நீண்ட நாளைக்கு பிறகு, பூமியில் எல்லா மக்களும் சீர்கெட்டிருந்ததைத் தேவன் பார்த்தார். இதனால் தேவனுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. நோவாவின் குடும்பம் தவிர எல்லா மக்களும் தேவனின் பார்வையில் சீர்கெட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் தேவனை நேசித்து அவரைச் சேவிக்க முயற்சித்தனர். தேவன் நோவாவை நோக்கி, கொப்பேர் மரத்தால் ஒரு பெரிய பேழையை உண்டாக்கு என்றார். பேழையை உண்டு பண்ணின போது எல்லாரும் நோவாவைப் பார்த்து சிரித்தார்கள். ஒருநாள் அந்த பேழை கட்டி முடிந்தது. தேவன் நோவாவைப் பார்த்து, “உன் குடும்பமும் வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடியும் சகலவித மாம்சமான ஜீவன்களும் பேழைக்குள்ளே சேர்த்துக் கொள், நீங்கள் எல்லோரும் பாதுகாப்பாய் இருப்பீர்கள்” என்றார். பிறகு தண்ணீர் வெள்ளமாகி பூமியின் மேல் பெருகியது. ஜீவசுவாச முள்ளவைகள் எல்லாம் மாண்டன. நோவாவும் அவர் குடும்பமும் பத்திரமாக இருந்தார்கள். தேவன் மேகத்தின் மேல் வானவில் உண்டாக்கினார். தேவன் கூறினார்: நான் மறுபடியும் பூமியின் மேல் ஜலப்பிரளயத்தை உண்டு பண்ணுவதில்லை என்றார்.

நீங்கள் வானவில் பார்த்தது உண்டா?




## கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
## வேத பாடசாலை

நிலை - 1A　　　　வீட்டுப்பாடம் - 2　　　　நோவா மற்றும் ஜலப்பிரளயம்

பெயர் ....................................................................................................

பேழைக்குள் சென்ற மிருகங்கள் குழப்பமான நிலையில் இருக்கிறது. ஒரே விதமான மிருகங்களின் சித்திரத்தைக் கோடுகளால் இணைத்து அடையாளம் செய்க.




## கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
## வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 3 ஆபிராம் தன் வீட்டை விட்டு வெளியேறுதல்

பெயர் ........................................................................................................

தேவன் ஆபிராமிடத்தில் கூறுகிறார்: "நீ சென்று வேறு தேசத்தில் வசி". புள்ளிகளை ஒன்று சேர்த்து ஆபிராமின் கூடாரத்தைப் பூர்த்தி செய்க :-



## கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
## வேத பாடசாலை

நிலை 1A      பாடம் - 3      ஆபிரகாம் தன் வீட்டை விட்டு வெளியேறுதல்


**(ஜெபம்)** எங்களை எவ்வேளையும் பாதுகாப்பதற்கு நன்றி
இயேசுவின் நாமத்தில், ஆமென்.

பாடம் : ஆபிராம் ஊர் என்ற பட்டணத்தில் வசித்து வந்தான். அந்த இடத்தில் இருந்த மக்கள் தேவனை நேசிக்க வில்லை. அதனால் தேவன் ஆபிராமிடம் ஊர் என்ற பட்டணத்தை விட்டு புறப்படு என்றார். "நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப்போ" என்றார். பிறகு ஆபிராம் தன் மனைவியாகிய சாராளையும் தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும், தன்னுடைய ஒட்டகங்கள், கழுதைகள் மீது தன் பொருள்களை எல்லாம் ஏற்றி, அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

ஆபிராமுக்கு அவன் எங்கு செல்கிறான் என்று தெரியாது. ஆனால் தேவன் அவனுக்கு வழி காட்டினார். அந்த வழி மீக நீண்டதாக இருந்தது. கடைசியில் ஆபிராம் இஸ்ரவேல் என்ற தேசத்திற்குச் சென்றான்.


தேவன் ஆபிராம் மீது தயவாக இருந்தார். எனென்றால் தன்னுடைய வீட்டை விட்டு வெளியில் செல்வதற்கு மிகக் கடினமாக இருந்தாலும் ஆபிராம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார்.

நாமும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் தேவன் நம்மில் தயவாய் இருப்பார்.



ஆபிராம் ஊர் என்ற பட்டணத்தை விட்டுச் சென்றான்.

தேவன் காண்பித்த தேசத்தில் ஒரு கூடாரத்தில் அவன் வசித்து வந்தான்.



கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 4 ஆபிரகாம் மற்றும் சாராளுக்கு ஒரு குழந்தை

பெயர் ..................................................................................................

சாராள் தன் குழந்தையின் பின்புறம் நாடாவைக்கட்டி தாலாட்டுதல்.



**ஆசிரியை குறிப்பு :-** குழந்தையின் சித்திரத்தைக் கத்தரித்து எடுத்துக் கொள்ளவும். கத்தரித்த குழந்தையின் கால் பகுதியை, தாயின் இடுப்பில் தொங்கும் வெண்ணிற மேலாடைக்கு மேலுள்ள கீறின கருப்புப் பகுதிக்குள் வைக்கவும். அதில் நாடாவைக் கட்டி பின்னாலிருந்து இணைக்கவும்.



## கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை வேத பாடசாலை

நிலை 1A பாடம் - 4 ஆபிரகாம் மற்றும் சாராளுக்கு ஓர் குழந்தை

**(ஜெபம்)** தேவன் எங்களுக்குக் கொடுக்கும் பொருட்களுக்காக நன்றி. எங்கள் குடுப்பத்திற்கும் மற்றும் எங்கள் வீட்டிற்காவும் மிக நன்றி. இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**பாடம் :** ஆபிரகாம் இஸ்ரேல் தேசத்தில் வசித்தான்.

தேவன் சொன்னபடி அவனுக்கு இடத்தையும், பிள்ளைகளையும் கொடுக்கச் சித்தமாயிருந்தார். ஆனால் ஆபிரகாம் மிகவும் கவலையாக இருந்தான். ஏன்னென்றால் அவனுக்கு பிள்ளைகள் இல்லை.

ஒரு நாள் மூன்று புருஷர்கள் கூடாரவாசல் எதிரில் வந்து கொண்டு இருந்தார்கள் ஆபிரகாம் சாராளிடத்தில், “நீ சீக்கிரமாய் அப்பங்களைச் செய்” என்றான்

புசித்தப் பிறகு அந்தப் புருஷர் “உன் மனைவிபாகிய சாராளுக்கு ஒரு குமாரன்” பிறப்பான் என்றார்கள். இந்த முன்று புருஷர்களும் தேவ தூதார்கள். இவர்கள் தேவனுடைய செய்திகளைக் கொண்டு வந்தவர்கள்.

சாராளுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்ததைக் கண்டு அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். அவனுக்கு ஈசாக்கு என்று பெயர் இட்டார்கள். அவர்கள் தேவனுக்கு நன்றி கூறினார்கள். தேவன் எப்போதும் வாக்குத்தத்தத்தை நிறை வேற்றுபவர்.




கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 5 தேவன் ஆபிரகாமைப் பரிசோதித்தார்

பெயர் ..........................................................................................

ஓவியத்தை வர்ணங்கள் பூசி நீங்கள் கண்டு பிடிப்பது என்னவென்றால் ஆபிரகாம் எதை முட்புதரில் கண்டுப் பிடித்தான் என்று பாருங்கள்.



✗ குறியிட்ட இடத்தில் பச்சை நிறம் பூசுங்கள்.

✔ குறியிட்ட இடத்தில் மண் நிறம் பூசுங்கள்.

நிலை 1A பாடம் - 5 **தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்**

**(ஜெபம்)** உம்மைப் பிரியப்படுத்தக் கடினமான முறையில் உழைக்கத் தயை செய்யும்படி இயேசுவின் நாமத்தில் கேட்டு கொள்கிறோம், ஆமென்.

**பாடம் :** ஆபிரகாம் மற்றும் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பெயர்.

ஒரு நாள் தேவன் ஆபிரகாமிடத்தில், "நீ உன் மகனாகிய ஈசாக்கை எனக்குப் பலியாகப் பலியிடு" என்றார்.

ஆபிரகாமுக்கு மிகக் கவலையாக இருந்தது. ஏனென்றால் தன் மகன் ஈசாக்கை அவன் மிகவும் நேசித்தான். ஆனால் ஆபிரகாம் தேவன் மீதும் கூட அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்தான்.

ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தன் கழுதையின் மேல் விறகை ஏற்றி சேணங்கட்டி, தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டி கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

அப்பொழுது ஈசாக்கு "இதோ நெருப்பும் கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே ?" என்றான். அதற்கு ஆபிரகாம், "என் மகனே தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்" என்றான்.

ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளிமேல் அவனைக் கிடத்தினான். பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான். அப்பொழுது அவர், "பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே. நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்றார்.

பின்பு ஒரு ஆட்டுக்கடா புதரில் சிக்கிக் கொண்டிருந்தது. அதை எடுத்து தன் மகனுக்குப் பதிலாக அந்த ஆட்டை பலியாக தேவனுக்கு கொடுத்தான்.


பிறகு தேவன் தமது ஒரே மகனைப் பலியாகக் கொடுத்து, தமது மகன் இயேசுவை மரிக்கச் செய்தார்.

கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 6 ஈசாக்குக்கு ஒரு மனைவி

பெயர் ..........................................................................................

புள்ளிகளை ஒன்று சேர்த்து, ஒட்டகமும் தண்ணீர் குடிப்பதற்காக. தண்ணீர் தொட்டியைச் சித்தரியுங்கள்.



நிலை 1A　　பாடம் - 6　　ஈசாக்குக்கு ஒரு மனைவி

**(ஜெபம்)**　　உம்மை நேசிக்கும் நல்ல சிநேகிதர்கள்
கிடைப்பதற்கு உதவி செய்யும்
இயேசுவின் நாமத்தில் - ஆமென்.

பாடம் : ஈசாக்கு வளர்ந்தான். பின்பு அவன் திருமணம் செய்ய வேண்டிய நாட்கள் நெருங்கியது. ஈசாக்குக்கு நல்ல மனைவி அமைய ஆபிரகாம் விரும்பினான். ஆனால் அக்கம் பக்கத்தில் வாழ்ந்த மக்கள் தீய சிந்தனையாக இருந்தார்கள். அதனால் ஆபிரகாம் எலியேசர் என்ற வேலைக்காரனை அனுப்பினான். "ஈசாக்குக்கென்று மனைவியைக் கண்டுப்பிடி" என்று கூறினான்.

எலியேசர் மிக தொலைவில் ஒட்டகத்தின் மேல் பயணம் செய்து, ஒரு நகரத்திற்கு ஆபிரகாம் சொல்படி வந்தான். அவன் நகரத்தின் வெளியில் கிணற்றருகே நின்று ஜெபம் செய்தான். அவன் கூறினான். "தேவனே, தயவு செய்து ஈசாக்குக்கு ஏற்ற சரியான மனைவி எனக்கும் என் ஒட்டகங்களுக்கும் நான் கேட்கும் போது தண்ணீர் கொடுக்கட்டும். ஒரு சௌந்திரியமான பெண் கிணற்று அருகே வந்தாள். "தயவு செய்து எனக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கொடு" என்று எலியேசர் கேட்டான். அவள் கிணற்றிலிருந்து தண்ணீரை மொண்டு அவனுக்கும் அவன் ஒட்டகங்களுக்கும் கொடுத்தாள். எலியேசர் நன்றி கூறினான். அந்த பெண்ணின் பெயர் ரெபெக்காள். எலியேசர் அவளுடைய குடும்பத்தைப் பார்த்த பிறகு அவளைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு வந்தான். ஈசாக்கு ரெபெக்காளைப் பார்த்தவுடன் மிகவும் விரும்பினான். பிறகு அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்தது.




கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை 1A வீட்டுப்பாடம் - 7 யோசேப்பை எகிப்தில் விற்றது

பெயர் ....................................................................................................

யோசேப்பின் பலநிற அங்கியை வர்ணம் பூசுக.



## கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
## வேத பாடசாலை

நிலை 1A  பாடம் - 7  **யோசேப்பை எகிப்தில் விற்றது**

**(ஜெபம்)** எங்களுக்கு பொறாமையிலிருந்து விட்டு விலகி நடக்க உதவி செய்யும். அன்பு யேசுவினி மித்தம், ஆமென்.


**பாடம் :** யாக்கோபுக்கு 12 மகன்கள் இருந்தார்கள். ஆனால் அவர் யோசேப்பை மிகச் சிறந்த முறையில் நேசித்தார். அவர் பல வர்ணத்தில் ஒரு மேல்சட்டை செய்தார். ஆனால் அவன் சகோதரர்களுக்குப் பொறாமை உண்டாயிற்று. ஒரு நாள் யாக்கோபு யோசேபிடம் கூறினார்: "நீ உன் சகோதார்களைக் கண்டு பிடி. அவர்கள் ஆடுகளை மேய்த்து கொண்டிருப்பார்கள்." பின் யோசேப்பு சென்று அவர்களைக் கண்டு பிடித்தான். யோசேப்பு வந்து கொண்டிருந்ததைப் பார்த்து அவர்கள் வெறுப்பு அடைந்தார்கள். "பிறகு அவனைக் கொலை செய்யலாம்" என்று கூறி, "ஒரு காட்டு மிருகம் அவனைத் தின்று விட்டது" என்றார்கள். "அவனைக் கொலை செய்ய வேண்டாம். ஆனால் அவனை இந்த பள்ளத்தில் போடலாம்" என்றான். அவன் வந்த பிறகு அவனை அபாயத்திலிருந்து காப்பாற்றினான். அவன் சகோதரர்கள் யோசேப்பைப் பிடித்து தாக்கி அவனுடைய அழகான மேல் அங்கியை கிழித்து அவனை ஆழமான பள்ளத்தில் போட்டார்கள். அவர்கள் சாப்பிட்டு கொண்டிருக்கையில் சில மனிதர்கள் ஒட்டகங்களின் மேல் வருவதைக் கண்டார்கள். அவர்கள் யோசேப்பைப் பள்ளத்திலிருந்து வெளியில் தூக்கினார்கள். ஆனாலும் அவன் மனங்கசந்து அழுதான். அவனுடைய சகோதாரர்கள் அவனை அடிமையாக விற்றார்கள். யோசேப்பை எகிப்த் தேசத்திற்கு எடுத்துக் கொண்டு சென்றார்கள் அவன் அங்கு சென்ற பிறகு அவனை அதிக செல்வம் உள்ள மனிதனிடத்தில் அடிமையாக விற்றார்கள். இடையில் அவன் சகோதரர்கள் யோசேப்பின் மேல் ஆடையை ரத்தத்தினால் தோய்த்து அதை யாக்கோபினிடத்தில் கொண்டு போனார்கள். "யோசேப்பு இறந்தான்" என்று அவர்கள் அவனிடத்தில் கூறினார்கள். ஒரு காட்டு மிருகம் அவனைத் தின்று விட்டது. யாக்கோபு வருத்தத்துடன் அழுதான். ஏனெனில் அவன் இவர்களை நம்பினான்.



கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை 1A பாடம் - 8 (A) **யோசேப்பு காவலில் இருந்தது**

அதற்கு முன் பானம் பரிமாறுபவனிடம் யோசேப்பு, “சிறையிலிருந்து என்னை விடுவிக்கும்படி பார்வோனிடம் சொல்லு. ஏனெனில் நான் தவறு எதுவும் செய்யவில்லை” என்று கெஞ்சினான். ஆனால் பானம் பரிமாறுபவன் யோசேப்பைக் குறித்து எல்லாவற்றையும் மறந்துப் போனான்.



ரொட்டி சுடுபவனின் கனவு



பானம் பரிமாறுபவனின் கனவு

நிலை 1A பாடம் - 8 யோசேப்பு காவலில் இருந்தது

**(ஜெபம்)** தயவு செய்து எங்களைப் பாதுகாத்து
உம்முடைய வழியில் நடத்தும். இயேசுவின்
நாமத்தில், ஆமென்.

பாடம் : யோசேப்பை போத்திபாரிடத்தில் விற்றார்கள். யோசேப்பின் மேல் போத்திபார் நம்பிக்கை வைத்து எல்லாவற்றின்மேலும் அவனை அதிகாரியாக வைத்தான். தேவன் யோசேப்பை ஆசீர்வதித்தார். பிறகு, எல்லாம் மிக சிறந்த முறையில் போத்திபார் வீட்டில் நடந்தது.

ஒரு நாள் போத்திபாரின் மனைவி கூறினாள், "யோசேப்பு ஒரு பொல்லாப்பு செய்து உள்ளான்" என்று பொய் கூறினாள். போத்திபார் அவள் கூறியதை நம்பினான். அதனால் யோசேப்பைச் சிறையில் போட்டார்கள். சிறை அதிகாரிக்கு யோசேப்பின் மேல் விருப்பமாக இருந்ததினால் அவனை சிறைக் கைதிகளைக் கவனிக்கும்படி அதிகாரம் கொடுத்தான். சிறையில் பார்வோனுடைய ரொட்டி தயாரிப்பவனும் பானம் பரிமாறுபவனும் கைதிகளாக இருந்தார்கள். ஒரு நாள் இரவு அந்த இருவருக்கும் கனவு வந்தது.

யோசேப்பு, "கனவைப்பற்றி கூறுங்கள்" என்றான். பானம் பரிமாறுபவனின் கனவில், "மூன்று திராட்சை கிளைகளும் அந்தக் கிளையில் மொட்டுக்களும், பூவும், திராட்ச பழங்களும் இருந்தது. பானம் பரிமாறுபவன் திராட்ச பழங்களை எடுத்துப் பிழிந்து ரசத்தைப் பார்வோனின் கோப்பையில் ஊற்றிக் கொடுத்தான்." யோசேப்பு கூறினான், "இன்னும் மூன்று நாட்களில் உன்னைப் பார்வோன் விடுதலை செய்வான், மறுபடியும் நீ அவனுக்கு திராட்சரசம் கொடுப்பாய்."

ரொட்டி செய்பவன் மூன்று கூடைகளைக் கனவில் கண்டான். அந்தக் கூடையில் பார்வோனுக்கென்று ரொட்டி அடை இருந்தது. அதை எடுத்துக் கொண்டு போகையில், பறவைகள் தீடீர் என்று பறந்து வந்து, அதைக் கொத்தித் தின்று விட்டது.


யோசேப்பு கூறினான், "பார்வோன் கட்டளையின்படி இன்னும் மூன்று நாட்களில் நீ கொலை செய்யப்படுவாய்." மூன்று நாட்கள் சென்றப் பிறகு பார்வோனின் பிறந்தநாள் வந்தது. அவன் சேவகர்களிடம் கூறினான், "நீங்கள் ரொட்டி செய்பவனைக் கொலை செய்யுங்கள், ஆனால் பானம் பரிமாறுபவனை விடுதலை செய்யுங்கள்." மறுபடியும் அவன் பார்வோனுக்குத் திராட்சரசம் பரிமாறினான்.

கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை 1A வீட்டுப் பாடம் - 8 சிறையில் யோசேப்பு


பெயர் ..............................................................................................

பானம் பரிமாறுபவனுக்குச் சந்தோஷமான கனவு வந்தது. அவனுடைய சந்தோஷமான முகத்தைச் சித்தரிக்கவும்.





ரொட்டி செய்பவனுடைய துக்கமான கனவு துக்கமான முகத்தை சித்தரிக்கவும்.



நிலை 1A பாடம் - 9 (தொடர்ச்சி) பார்வோனின் சொப்பனங்கள்

யோசேப்பு ஏழு வருடங்களுக்குத் தேவையான தானியத்தைச் சேர்த்து வைத்தான். பிறகு அந்த ஏழு வருடத்தின் முடிவில் பஞ்சம் வருவதற்குள் களஞ்சியங்கள் நிரம்பின. ஏழுவருட பஞ்சம் வந்த போது யோசேப்பு சேர்த்து வைத்திருந்த தானியத்தைத் தன் ஜனங்களுக்கு உணவாகக் கொடுத்தான்.



பார்வோன் மாடுகள் மற்றும் தானிய கதிர்கள் பற்றி சொப்பனம் கண்டான்.

## கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை வேத பாடசாலை

நிலை 1A    பாடம் - 9    பார்வோனின் சொப்பனங்கள்

**(ஜெபம்)** அன்பு தேவனே, நீர் உம்முடைய மக்களையும், என்னையும் கவனித்து கொண்டதற்காக இயேசுவின் நாமத்தில் உமக்கு நன்றி, ஆமென்.

பாடம் : ஒரு நாள் இரவு பார்வோனுக்குச் சொப்பனம் வந்தது. ஏழு புஷ்டியான மாடுகள் நதியில் இருந்து வெளியே வருவதைப் பார்த்தான். பிறகு ஏழு மெலிந்த மாடுகள் வந்தன. அந்த மெலிந்த மாடுகள் புஷ்டியுள்ள மாடுகளைத் தின்றன. ஆனால் மெலிந்த மாடுகள் புஷ்டியாகவில்லை.

பார்வோன் தூங்கி மறுபடியும் சொப்பனம் கண்டான். நல்ல செழுடமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்தது. அதைச் சாவியான கதிர்கள் செழுமையும் நிறைமேனியுமான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டது.

பார்வோன் எழுந்து தன் ஞானிகளிடம் தான் கண்ட சொப்பனத்தைப் பற்றி கூறினான். ஆனால் அதின் அர்த்தத்தை அவர்களுக்கு தெரியவில்லை.

பானம் பரிமாறுபவன், "இந்தச் சொப்பனத்தை யோசேப்பு சொல்லுவான். யோசேப்பு சிறையில் இருக்கும் போது என்னுடைய சொப்பனத்தைச் சொன்னது போல் உமக்குச் சொப்பனத்திற்கும் அர்த்தம் கூறுவான்" என்றான். சிறையிலிருந்து யோசேப்பை அழைத்துக் கொண்டு வந்தனர். சொப்பனத்தை அவனிடம் சொன்னான்.

அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தரமாக, "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு உத்தரவு அருளிச் செய்வார், அந்த ஏழு நல்ல பசுக்களும் ஏழு வருஷமாம். அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு செழுமையான வருஷமாம். ஏழு அவலட்சணமுமான ஏழு பசுக்களும் ஏழு வருஷமாம். கீழ்காற்றினால் தீய்ந்து சாவியான ஏழு கதிர்களும் ஏழு வருஷமாம். இவைகள் பஞ்சமுள்ள ஏழு வருஷமாம். விளையும் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைக்கப் பாருங்கள்."

இது நல்லது என்று பார்வோன் நினைத்தான். "யோசேப்பே, தேவன் உன்னுடன் இருப்பார்" என்றார். பின்னும் பார்வோன், "யோசேப்பை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினேன்" என்றான்.

பார்வோன் தன் கையில் இருந்த தன் முத்திரை மோதிரத்தை யோசேப்பின் கையில் போட்டு, பொன் சரப்பணியை அவன் கழுத்தில் போட்டு, அவனை ஒரு பெரிய இரதத்தின் மேல் ஏற்றி, தேசத்தைச் சுற்றி வரச் செய்தான்.

கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை 1A வீட்டுப்பாடம் - 9 பார்வோனின் சொப்பனங்கள்

பெயர் ..........................................................................................................

எத்தனை கொழுத்த மாடுகள் அங்கு இருந்தன?

எத்தனை மெலிந்த மாடுகள் அங்கு இருந்தன?

மாட்டின் நான்கு கால்களைச் சித்தரிக்கவும்.




கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை 1A வீட்டுப்பாடம் - 10 யாக்கோபு எகிப்துக்கு வருதல்

பெயர் ..............................................................................................

நான்கு துண்டுகளை ஒன்று சேர்த்து யோசேப்பு மற்றும் அவனுடைய சகோதரர்கள் உணவு அருந்தும் காட்சியை ஒரே சித்திரமாகச் சீர்ப்படுத்தவும்.



கத்தரிக்கவும் :-

ஆசிரியை குறிப்பு : படத்தின் மூலைகளை இணைக்கும் கோடுகளின் மேல் கத்தரித்து, நான்கு துண்டுகளாக்கி, வேறொரு காகிதத்தின்மேல் சரியாக ஒட்டச் சொல்லவும்.

கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை 1A பாடம் - 10 யாக்கோபு எகிப்துக்கு வருதல்

**(ஜெபம்)** தயவு செய்து தேவனே, யோசேப்பு
தன் சகோதரரை மன்னித்தது போல தவறு
செய்பவர்களை மன்னிக்க எனக்கு உதவி
செய்யும். இயேசுவின் நிமித்தம், ஆமென்.

**பாடம் :** எகிப்து தேசத்திலும் அதைச் சுற்றி உள்ள நாடுகளிலும் உணவு இல்லாமல் இருந்தது. ஆகவே எல்லாரும் யோசேப்பினிடத்தில் தானியம் வாங்க வந்தார்கள். யோசேப்பின் தந்தை யாக்கோபு மற்றும் அவன் சகோதரர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. யாக்கோபு கூறினான், “எகிப்தில் தானியம் உள்ளது. அங்கு போய் உணவு வாங்குங்கள்” என்றான். அப்படியே சகோதரர்கள் எகிப்துக்குப் போனார்கள். அவர்கள் யோசேப்பைப் பணிந்து வணங்கினாலும் அவனை யார் என்று அறியவில்லை. யோசேப்பு தன் சகோதரரை அறிந்தான். “உங்கள் தந்தை இன்னும் உயிருடன் இருக்கிறாரா ?” என்று கேட்டான். முதலில் அவர்களை வேவுகாரர்கள் என்று நடத்தினதினால் அவர்கள் பயந்தார்கள். ஆனால் யோசேப்பு முத்தம் செய்து அவர்களை மன்னித்தான். யோசேப்பு, “என் தந்தையிடம் போய், எகிப்தில் நான் அதிகாரியாக இருக்கிறேன் என்று சொல்லி, அவரை அழைத்து வாருங்கள், உணவு இல்லாமற்போனால் நான் உங்களைப் போஷிக்கிறேன்” என்றான். முதலில் யாக்கோபு அவர்களை நம்பாவிட்டாலும் கழுதைகள் மற்றும் வண்டிகளில் கொண்டு வந்த உணவைப் பார்த்து, உண்மை என்று நம்பினான்.

யாக்கோபு, “என் மகன் யோசேப்பு இன்னும் உயிருடன் இருக்கிறான். நான் இறப்பதற்கு முன் அவனைப் பார்க்க வேண்டும்.” என்று கூறினான்.

யோசேப்பு தன் இரதத்தில் ஏறி தன் தகப்பனைப் பார்ப்பதற்கு மிக மகிழ்ச்சியாகச் சென்றான். ஏனெனில் தேவன் அவனை ஆசீர்வதித்தார்.



கிறிஸ்டெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் -11 மோசேயின் பிறப்பு

பெயர் ..................................................................................................

மோசேயின் சித்திரத்தை வர்ணம் பூசுக :-



நிலை 1A பாடம் - 11 **மோசேயின் பிறப்பு**

**(ஜெபம்)** தேவனே, குழந்தையான மோசேயைப் பத்திரமாகக் காத்ததற்காக உமக்கு நன்றி. தயவுசெய்து என்னையும் என் குடும்பத்தாரையும் காத்தருளும். இயேசுவினிமித்தம் கேட்கிறேன், ஆமென்.

**பாடம் :** எகிப்தில் ஒரு புதிய பார்வோன் அரசன் அரசனாக இருந்தான். அவன் இஸ்ரவேல் மக்களை அடிமைகளாக்கினான். அவர்களுடைய எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றுபோடும்படி சொன்னான்.

அம்ராம் மற்றும் யோகெபெத்துக்குப் புதிதாக ஒரு ஆண்குழந்தை பிறந்ததால் பயந்தார்கள். அந்த குழந்தை மிகவும் அழகாய் இருந்தான். ஆகவே அவனை ஒளித்துவைக்கத் தீர்மானித்தார்கள்.

அவன் வளரும்போது அவனுடைய அழுகை சத்தத்தைப் பக்கத்தில் யாராவது கேட்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகவே, யோகெபெத் ஒரு தொட்டிலைச் செய்து, அதில் அந்தக் குழந்தையை வைத்து, ஆற்றில் நாணல் புதரின் நடுவே ஒளித்து வைத்தாள். பின்பு தனது சிறிய மகள் மிரியாம் என்பவளை அழைத்து, "அந்தக் குழந்தையைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்" என்று கூறினாள்.

விரைவில், பார்வோனின் மகளான எகிப்தின் ராஜகுமாரி அந்த நதியில் குளிக்க வந்தாள். அந்தக் குழந்தை அழுகிற சத்தத்தைக் கேட்டு, அவள் தன் தாதிகளில் ஒருத்தியை அனுப்பி, தூக்கிக் கொண்டு வரும்படி சொன்னாள். அவள் அவனைத் தொட்டிலில் உற்றுப் பார்த்தாள். அந்தக் குழந்தை மிக அழகாக இருந்தது.

அவள், "அவனை அரண்மனைக்கு எடுத்து வாருங்கள்" என்றாள். மிரியாம் ராஜகுமாரியிடம் ஓடி, "அந்தக் குழந்தையைக் கவனிக்கும்படி ஒரு தாதியை அழைத்து வரலாமா ?" என்று கேட்டாள்.

ராஜகுமாரி சிரித்து தலையசைத்தாள். எனவே மிரியாம் ஓடிப்போய் தனது மகளை அழைத்து வந்தாள்.



யோகெபெத் தன் குழந்தை பத்திரமாக இருப்பதைப் பார்த்தபோது மிகவும் மகிழ்ந்தாள். அவன் வளரும்வரை அவனை அவள் கவனித்தாள்.

ராஜகுமாரி அவனுக்கு மோசே என்று பேரிட்டாள்.

நிலை 1A　　பாடம் - 12　　எரிகிற முட்புதரின் அருகில் மோசே

**(ஜெபம்)** நாங்கள் உம்மிடத்திலும் எங்கள் பெற்றோரிடத்திலும்
நல்லவர்களாய் வாழ எங்களுக்கு உதவி செய்யும்,
இயேசுவின் நிமித்தம், ஆமென்.

பாடம் : மோசே வளரும் போது பார்வோனின் அரண்மனையில் வசித்தான். ஆனால் அவன் தனது ஜனமாகிய இஸ்ரேவேலரை நேசித்தான். அவர்கள் அடிமைகளாக இருந்ததினால் மனம் வருந்தினான். ஒரு நாள் ஓர் எகிப்தியன் ஒரு இஸ்ரவேலனை அடிக்கிறதைக் கண்டான். அதனால் கோபம் அடைந்து அந்த எகிப்தியனைக் கொன்றான். பின்பு அவன் பயந்து அவன் செய்த கொலையைப் பார்வோன் அறிவான் என்று அறிந்து ஓடிவிட்டான். அவன் வனாந்திரத்தில் ஆடு மேய்த்தான். வெயில் அடிக்கும் நாளில் ஒரு முட்புதர் தீ பற்றி எரிகிறதைப் பார்த்தான். ஆனால் அந்த புதர் கருகாமல், பசுமையாகவே எரிந்து கொண்டிருந்தது. மோசே அதை உற்றுப்பார்த்தான். "மோசே, மோசே" என்ற சத்தம் கேட்டது. மோசே, "இதோ அடியேன்" என்றான். அந்த சத்தம் "கிட்ட வராதே, உன்னுடைய பாதரட்சைகளைக் கழற்று. நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி. நானே யெகோவா" என்றது. மோசே பயந்தான். "நீ எகிப்துக்குத் திரும்பிப் போய், என் ஜனங்களைக் காப்பாற்று. எகிப்தியர் அவர்களை வேதனை படுத்துகிறார்கள்" என்று யெகோவா கூறினார். மேலும் அவர், "உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புகிறேன். என் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்து, நான் உனக்குக் காண்பிக்கும் நல்ல தேசத்திற்கு அழைத்து கொண்டுப் போ" என்றார்.

அப்படியே மோசே தேவனுக்குக் கீழ்ப்படிந்து, எகிப்துக்குத் திருப்பிப் போனான்.


கிறிஸ்டடெல்ஃபியன் பிறரினின்று தனித்து இயங்கும் திருச்சபை
வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் -12 மோசே மற்றும் முட்செடியில் அக்கினிஜுவாலை

பெயர் ..................................................................................................

அக்கினிஜுவாலையின் முட்செடி நடுவிலிருந்து தேவன் மோசேயிடம் பேசினார்.

முட்செடியின் தீச்சுடருக்கு சிவப்பு நிறத்தில் வர்ணம் பூசுக :-



நிலை 1A பாடம் - 13 **எகிப்தில் கொள்ளை நோய்கள்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, எப்போதும் எங்கள் வழியில் நடவாமல் உம்முடைய வழியைப் பின்பற்ற உதவிசெய்யும். இயேசுவின் நாமத்தில் கேட்டு கொள்ளுகிறோம். ஆமென்.

பாடம்: யோசேப்பு இறந்தப் பிறகு எகிப்தியர் இஸ்ரேல் மக்களைக் கொடுமையாக நடத்தினார்கள். பிறகு புதிய பார்வோன் அரசன் அவர்களை அடிமைகளாக்கினான். தேவன் இஸ்ரவேல் மக்களை நேசித்தார். ஏனென்றால் அவர்கள் அவருடைய ஜனங்கள், அதனால் மோசே அவர்களைக் காப்பாற்றும்படி அவனை அனுப்பினார்.

"என் ஜனங்களைப் போக விடு, என்று தேவன் கூறினார்," என்று மோசே பார்வோனிடம் கூறினான்.

"தேவன் யார் ? நான் இஸ்ரேல் ஜனங்களைப் போக விடமாட்டேன்" என்று பார்வோன் கேலி செய்தான்.

அதனால் தேவன் நைல் என்ற நதியை இரத்தமாக மாறச் செய்தார்.

இதனால் நதியில் குடிநீர் இல்லாமல் போயிற்று. அப்போதும் ***பார்வோன் ஜனங்களைப் போக விட வில்லை.***

(கடைசி வாசகத்தை ஒவ்வொருமுறையும் பிள்ளைகள் திரும்ப சொல்லட்டும்)

பிறகு தேவன் நதியிலிருந்து தவளைகளை வெளியே வரச்செய்தார்.

தவளைகள் திரளாய் வந்தன. அவைகளை வீட்டிலும், படுக்கை அறையிலும், சமையல் அறையிலும், மாப்பிசைகிற தொட்டிகளிலும் கண்டனர். பார்வோன் கூறினான், "மோசே தவளைகளை நீக்கினால் இஸ்ரேல் ஜனங்களைப் போக விடுகிறேன்." அப்படியும் ***பார்வோன் ஜனங்களைப் போக விடவில்லை.***

பிறகு எகிப்து தேசம் எங்கும் பேன்களாயிற்று. பிறகும் ***பார்வோன் ஜனங்களாப் போக விட வில்லை.***

பின்பு ஈக்களின் தொல்லை ஏற்பட்டது. அப்படியும் ***பார்வோன் ஜனங்களைப் போகவிடவில்லை.***

அதிகமாக மிருக ஜீவன்களும் மாண்டு போயின. அப்படியும் ***பார்வோன் ஜனங்களைப் போக விடவில்லை.***

பிறகு எரிபந்தமான கொப்புளங்களை வரச்செய்தார், பிறகும் ***பார்வோன் ஜனங்களைப் போகவிடவில்லை.***

பிறகு கல்மழையும், கல்மழையோடே கலந்த அக்கினியும் பெய்யச் செய்தார். அப்படியிருந்தும் *அவர்களைப் பார்வோன் அனுப்பவில்லை.*


# கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
# தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 13 **எகிப்தில் கொள்ளை நோய்கள்**

பெயர் ..................................................................................................

குடும்பமும் சிநேகிதர்களும் சேர்ந்து விளையாடும் விளையாட்டு

ஒவ்வொருவரும் ஒரு வர்ணத்தில் காய் எடுக்கவும், 'ஆரம்பம்' என்ற கட்டத்தில் அவைகளை வைக்கவும். ஆரம்பியுங்கள். ஒவ்வொருவராக முறைப்படி அவரவர் காய்களை நகர்த்தவும். அந்தந்த படங்களிலுள்ள கட்டத்திற்கு வரும்போது அதில் சொல்லப்பட்டபடி செய்யவும். பாலும், தேனும் ஓடுகிற தேசத்தில் முதலில் வந்து சேருகிறவர் வெற்றி பெற்றவர் ஆவர்.



நிலை 1A பாடம் - 13/2

பிறகு வண்டுகளையும் வெட்டுக்கிளிகளையும் உண்டாக்கினார். அதன்பிறகு ***அவர்களைப் பார்வோன் அனுப்பவில்லை.***

மூன்று நாள் இருள் உண்டாக்கினார். ஆனாலும் ***அவர்களைப் பார்வோன் போகவிடவில்லை.***

தேவன் கூறினார், "மறுபடியும் ஒரு வாதையை அனுப்புவேன். அப்போது அவர்களைப் பார்வோன் அனுப்பிவிடுவான்."

பிறகு இரவு நேரத்தில் தேவன் தமது தூதர்களை அனுப்பி எகிப்தில் இருக்கும் எல்லா தலைபிள்ளையும் மரிக்கச் செய்தார். ஆனால் இஸ்ரேல் பிள்ளைகள் மரிக்கவில்லை. ஏனென்றால் அவர்களுடைய வீட்டின் கதவுகள் மீது அடையாளம் இருந்தது. தேவதூதர்கள் அந்த வீட்டைக் கடந்துபோய்விட்டார்கள்.

கடைசியில் பார்வோன் ஜனங்களை அனுப்பி விட்டான். அவர்கள் எகிப்தை விட்டுச் சீக்கிரமாய் போய்விட்டார்கள்.





ஆனாலும் அவர்களைப் பார்வோன் போகவிடமாட்டான்

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 14 செங்கடலைக் கடந்துச் செல்லுதல்

பெயர் ..........................................................................................................

கடல் அலைகளை நீல நிறத்தில் வர்ணமிடவும்.



**நிலை 1A** பாடம் - 14 **செங்கடலைக் கடந்து செல்லுதல்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, எங்கள் பாதுகாப்புக்காக உம்மீது நம்பிக்கை வைக்க இயேசுவின் நாமத்தில் எங்களுக்கு உதவி செய்யும், ஆமென்.

**பாடம்:** இஸ்ரேல் மக்கள் எகிப்தைவிட்டு வெளியேறியும் பார்வோன் தேவனை வெறுத்து, கீழ்ப்படியாமல் இருந்தான். பிறகும் அவன் மனதை கடினப்படுத்தி, சேனாதிபதிகளிடம், பின் தொடர்ந்து போய் இஸ்ரேல் ஜனங்களை எகிப்திற்கு மீண்டும் அழைத்து வரக்கூறினான்.

ஆனால் தேவன் தமது ஜனங்கள் மீது கண்ணோக்கமாய் இருந்தார்.

இஸ்ரேல் ஜனங்கள் எகிப்தைவிட்டு செங்கடலுக்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் எப்படி செங்கடலைத் தாண்டுவார்கள்? இந்த ஜனங்கள் திரும்பி பார்த்தபிறகு பார்வோனுடைய சேனை பின்னால் வருவதைக்கண்டுப் பயந்தார்கள்.

ஆனால் மோசே பயப்படவில்லை, “தேவன் காப்பாற்றுவார்,” என்று அவருக்குத் தெரியும்,

“நீங்கள் சும்மா நின்றுக் கொண்டு, எப்படி தேவன் நம்மை காப்பாற்றுவார் என்று பாருங்கள்” எனக் கூறினார்.


தேவன் மோசே மீது இரக்கம் காண்பித்து, “உன் கோலைக் கடலின் மீது நீட்டு” என்றார்.

மோசே இதைச் செய்தப்பிறகு கடல் இரண்டாகப் பிரிந்து, நடுவில் பாதைக்கு வழி விட்டது.

இஸ்ரேல் ஜனங்கள் உலர்ந்த பாதையில் கரையை நோக்கி கடலை விட்டு வெளியே சென்றார்கள். அதற்குள் அவர்களை எகிப்தியர் பின் தொடர்ந்தார்கள்.

தேவன் தமது ஜனங்கள் பத்திரமாகச் செல்லும்வரை பாதுகாத்தார். பிறகு “மோசே, உன் கோலை கடலை நோக்கி நீட்டு” என்றார்.


அப்போது மோசே அந்தக் கோலை கடலின் மீது நீட்டினவுடனே தண்ணீர் பாய்ந்து வந்து பாதையை நிறப்பி, பார்வோனையும் அவனுடைய சேனைகளையும் தண்ணீரினால் மூடினது. அவர்கள் எல்லோரும் அதில் மரித்தார்கள்.



கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A          வீட்டுப்பாடம் - 13/2

**ஆசிரியர்:** இந்தப் படத்தின் மாதிரியை ஒரு அட்டையில் வெட்டி ஒட்டவும். அதன் மையத்தில் துளையிட்டு குண்டூசியால் குத்தி, அம்புகுறியிட்ட கீழே இருக்கும் அட்டையின் மேல் வைத்து சுழற்றவும். சக்கரம் நின்றவுடன் அம்புகுறிக்கு எதிராக நிற்கும் கட்டத்திலுள்ள எண்ணின்படி வீட்டுப்பாடம் 13ல் உள்ள கட்டங்களில் காய்களை நகர்த்தவும்.



## கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
## தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை 1A பாடம் - 15 **இயேசுவின் பிறப்பு**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, தயவு செய்து எந்த ஆபத்து நேரிட்டாலும் நாங்கள உம் வல்லமை மீது நம்பிக்கை வைக்க எங்களுக்கு உதவி செய்யும். இயேசுவின் மூலம் கேட்கிறோம். ஆமென்.

**பாடம் :** மரியாள் என்ற பெண் நாசரேத் என்னும் கிராமத்தில் வசித்து வந்தாள். ஒரு நாள் கர்த்தருடைய தூதன் அவளுக்குத் தரிசனமானார்.

தூதன் கூறினான், "தேவன் உன்னைத் தெரிந்து எடுத்தார், அதனால் நீ ஒரு குமாரனைப் பெறுவாய். அந்த குழந்தை தேவனுடைய குமாரனாக இருப்பார். தேவன் தாவீதின் ராஜ்யபாரத்தைத் தன் குமாரனுக்குக் கொடுப்பார். இந்த ராஜ்யம் என்றும் நிலைத்து நிற்கும்".

மரியாள் வியப்படைந்து, "எனக்குத் திருமணம் ஆகவில்லேயே" என்று கூறினாள்.

ஆனால், தூதன் கூறினான், "அந்தக் குழந்தைக்குத் தேவன் தகப்பனாக இருப்பார். நீ அந்தக் குழந்தையை இயேசு என்று கூப்பிடு."

தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவி மரியாளுடன் யோசேப்பு வரிகட்டும்படி பெத்லகேமுக்குப் புறப்பட்டார்கள். அது வெகு தூரத்தில் இருந்தது.

யோசேப்பு தன் மனைவியாகிய மரியாளைக் கழுதையின் மீது உட்கார வைத்து பெத்லகேமுக்குப் புறப்பட்டான். மரியாள் பயணம் செய்து மிகவும் களைப்பாக இருந்ததினால், அங்கே தங்குவதற்கு யோசேப்பு ஒரு அறையைக் கேட்டான்.

சத்திரக்காரன் கூறினான், "இங்கு தங்குவதற்கு இடம் இல்லை. ஆனால் நீங்கள் அந்த மாட்டுத் தொழுவத்தில் தங்கிக் கொள்ளுங்கள்." பிறகு யோசேப்பு தன் மனைவியாகிய மரியாளுக்கு வைக்கோலில் ஒரு படுக்கை செய்தான். அன்று இரவே குழந்தை பிறந்தது.

பெத்லகேமுக்கு வெளியில், மேய்ப்பர்களுக்குப் பிரகாசமான வெளிச்சம் தோன்றி, அவர்களைச் சூழ்ந்தது. பிறகு தேவ தூதர்கள் எல்லோரும் சேர்ந்து, "உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும் பூலோகத்தில் சமாதானமும் உண்டாவதாக" என்று பாடினார்கள்.

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை


நிலை - 1A வீட்டுப்பாடம் - 15 **இயேசுவின் பிறப்பு**

பெயர் ..........................................................................................................

மரியாளைப் பெத்லகேமுக்கு எடுத்துச்செல்லும் கழுதையைக் கண்டுபிடிக்கவும்.

கீழ் கொடுக்கப்பட்ட படத்தில் வர்ணம் பூசுக.

O = நீலம் X = காப்பி ✓ = கருப்பு



கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை 1A　　பாடம் - 15/2　　**இயேசுவின் பிறப்பு**

மேய்ப்பர்களிடம் அந்தக் குழந்தைப்யை போய்ப் பார்க்கும்படி தேவதூதர் கூறினார்கள். அந்தக் குழந்தை தேவனுடைய குமாரனாகவும், ஒரு நாள் அகில உலகத்துக்கு ராஜாவாகவும் இருப்பார்.

எனவே அவர்கள் இயேசுவைத் தரிசிக்கும்படி பெத்லகேமுக்குப் போனார்கள்.



நிலை 1A பாடம் - 16 **ஞானிகள்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, தயவு செய்து இயேசுவிடம் நாங்கள் அன்பு கூற எங்களுக்கு உதவி செய்யும். அவருடைய நாமத்தில் கேட்டு கொள்கிறோம். ஆமென்.

**பாடம் :** இயேசு பெத்லகேம் என்ற இடத்தில் பிறந்தார். ஒரு நட்சத்திரம் வானில் மிகவும் பிரகாசித்தது. சில ஞானிகள் தூரத்திலிருந்து அந்த நட்சத்திரத்தைப் பார்த்தார்கள். அவர்கள் அதைப் பின்தொடர்ந்து செல்ல யோசித்தார்கள். ஏனென்றால் மிகப்பெரிய ஒரு ராஜா அந்த நாளில் பிறந்திருந்தார்.

எருசலேம் வரும் வரை அந்த நட்சத்திரத்தை வெகுநாட்களாகப் பின் தொடர்ந்தார்கள். "யூதர்களின் ராஜா எங்கு பிறந்து இருக்கிறார் ? கிழக்கிலிருந்து நட்சத்திரத்தைப் பார்த்து அவரைப் பணிந்து கொள்ள வந்தோம்" என்றார்கள்.

ஒரு பொல்லாத ராஜா எருசேலேமில் வசிந்து வந்தான். இந்த ஞானிகளைப் பேசக் கேட்டு மிகவும் கோபம் அடைந்தான். ஏனென்றால் வேறு ராஜா இஸ்ரேல் நாட்டில் இருக்கக் கூடாது என்று நினைத்தான்.

"நீங்கள் போய் அந்த குழந்தை ராஜாவைக் கண்டுப் பிடியுங்கள். பிறகு அவர் எங்கு இருக்கிறார் என்று எனக்கு வந்து சொல்லுங்கள்" என்று கேட்டான். அந்தக் குழந்தையைக் கொல்ல வகை தேடினான்.

அந்த ஞானிகள் பெத்லகேம் வந்து சேர்ந்தார்கள். அங்கு பிள்ளையையும், அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து, அவர்கள் கொண்டு வந்த காணிக்கையைக் கொடுத்தார்கள். பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பாமல் வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

ஏரோது ராஜா மிகவும் கோபமாக இருந்தான். ஆனால் அவர்கள் பெத்லகேமேக்குச் சென்றுவிட்டார்கள் என்று ஏரோது ராஜாவுக்குத் தெரியும். எனவே தன் ஆட்களை அனுப்பி பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்.


ஆனாலும் ஏரோது ராஜா இயேசுவைக் கொலை செய்யவில்லை. ஏனென்றால் தேவன் தமது தூதர்களை அனுப்பி யோசேப்பை எச்சரித்தார்.

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A     வீட்டுப்பாடம் - 16     ஞானிகள்

பெயர் ..........................................................................................................

புள்ளிகள் இருக்கும் நட்சத்திரத்தின் கோட்டுக்குள் மஞ்சள் நிறத்தால் வர்ணம் பூசி நிரப்பவும்.



நிலை 1A பாடம் - 16/2 ஞானிகள்

தேவதூதன் கூறினான், "ஏரோது இயேசுவைக் கொலை செய்ய வகை தேடுகிறான். ஆகையால் குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு தப்பிச் செல்."

யோசேப்பு மரியாளையும், குழந்தையையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குள் ஓடிப்போய் தப்பினார்கள்.



நிலை 1A பாடம் - 17. **இயேசு எருசலேமுக்குச் செல்லுதல்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, தயவு செய்து நாங்கள் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக வளர உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம், ஆமென்.

பாடம் : யூதர்கள் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகை கொண்டாடும்படி எருசலேமுக்குப் போவார்கள். அப்போது எகிப்திலிருந்து தேவன் அவர்களை எப்படி வெளியில் அழைத்து வந்தார் என்றும், தேவதூதர் அவர்களின் வீட்டை எப்படி கடந்துச் சென்று எகிப்தியரின் வீட்டில் உள்ள முதல் பிள்ளைகளைக் கொன்று போட்டார்கள் என்றும் நினைவுகூர்ந்தார்கள்.

இயேசுவுக்குப் பன்னிரண்டு வயதான போது, யோசேப்பும், மரியாளும் எருசலேமுக்குச் சென்றார்கள். இயேசு முதலில் எருசலேமின் கோட்டைச் சுவர்களைப் பார்த்தபோது "நான் தான் உண்மையாக எருசலேமின் ராஜா," என்று அவருக்குத் தெரிய வந்தது.

அந்த இரவு ஒரு ஆட்டுக்குட்டியை அடித்தார்கள். அவர் ஒரு தேவ ஆட்டுக்குட்டி. "நான் ஒரு நாள் மரித்து என் ஜனங்களைப் பாவத்தில் இருந்து விடுதலை ஆக்குவேன்" என்று இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். அவருக்கு எப்படி இருந்திருக்கும்?

இயேசுவுக்கு எருசலேம் மிகவும் பிடித்திருந்தது. அந்த மிகப் பெரிய தேவாலயத்துக்குப் போய் யோசேப்பும், மரியாளும் தேவனைப் பணிந்து கொள்ள இயேசுவை அழைத்துச் சென்றார்கள். பிறகு வீட்டுக்குப் போக வேண்டிய நேரம் வந்தது. யோசப்பும், மரியாளும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். பிறகு இயேசு தங்களிடம் இல்லை என்று அறிந்தார்கள். "எங்கே அவர்?" என்று அவர்கள் கேட்டார்கள். ஆனால் அவரை யாரும் பார்க்கவில்லை.

அதனால் அவர்கள் மறுபடியும் எருசலேமுக்குத் திரும்பினார்கள். அவர்கள் எல்லா இடங்களிலும் அவரைத் தேடினார்கள். அவரை எங்கும் காணவில்லை. மூன்றாம் நாள் அவர்கள் அவரைத் தேவாலயத்தில் இருப்பார் என்று நினைத்து அங்குச் சென்றார்கள். அங்கு மிகப்பெரிய கூட்டமாக இருந்தது. அங்கு வயதான அறிவாளிகள் ஒரு சிறுவனுடைய போதகத்தைக் கேட்டு கொண்டிருந்தார்கள். அந்தச் சிறுவன் யார் என்றால் இயேசு.


மரியாள் சீக்கிரமாக அவரிடம் போய், "நீ ஏன் எங்களை இவ்வளவு தொந்தரவு செய்தாய்? நாங்கள் எல்லா இடத்திலும் உன்னைத் தேடினோம்" என்று கேட்டாள்.

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 17 இயேசு எருசலேமுக்குச் செல்லுதல்

பெயர் ...............................................................................................

மரியாள் யோசேப்புடன் எருசலேமுக்கு நடந்து சென்று சிறுவன் இயேசு எங்கு இருக்கிறார் என்று தேடி கண்டு பிடிக்க உதவி செய்யுங்கள்.



கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை 1A பாடம் - 17/2 இயேசு எருசலேமுக்குச் செல்லுதல்

இயேசு ஆச்சரியப்பட்டு "ஏன் என்னைத் தேடினீர்கள்? மிக முக்கியமாக, நான் என் தகப்பன் வேலை செய்யவேண்டும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்," என்று கேட்டார்,

பிறகு இயேசு அவர்களுடன் வீட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டார்.



நிலை 1A பாடம் - 18 **கானா ஊரில் கல்யாணம்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, நீர் எங்களுக்கு உணவும், உடையும் கொடுத்ததற்காக நன்றி. நீர் எங்களைச் சந்தோஷமாக வைத்ததற்காக இயேசுவின் நாமத்தில் நன்றி. ஆமென்.

**பாடம் :** ஒரு நாள் இயேசுவை கல்யாண விருந்துக்கு அழைத்திருந்தார்கள். அவருடைய தாயையும், மற்றும் சீஷரையும் கூட அழைத்திருந்தார்கள்.

எல்லோரும் கல்யாண விருந்தில் உட்கார்ந்திருந்தார்கள். எல்லாரும் மிக சந்தோஷமாக இருந்தார்கள். இந்தக் கல்யாணம் கானா என்ற ஒரு கிராமத்தில் நடந்தது.

இந்தக் கல்யாணம் ஏழ்மையான ஜனங்கள் மூலமாய் நடுத்தப்பட்டது. அங்கு திராட்சரசம் குறைவுபட்டது. கல்யாணத்திற்கு வந்த ஜனங்கள் குடிப்பதற்கு திராட்சரம் கேட்டார்கள். ஏனென்றால் அந்த நாள் மிகவும் உஷ்ணமாக இருந்தது. இப்போது அவர்கள் என்ன செய்வார்கள்?

மரியாள் இயேசுவிடம் நடப்பதைக் கூறினார். “அவர்கள் திராட்சரசத்திற்காக இங்கும் அங்கும் ஓடுகிறார்கள்.” மணவாளனுக்கும், மணவாட்டிக்கும் கூட திராட்சரசம் தீர்ந்து போனது என்று தெரியவில்லை, ஆனால் வேலை ஆட்களுக்கு மட்டும் தெரிந்திருந்தது.

அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி, “அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்” என்றார். அங்கு ஆறு கற்சாடிகள் இருந்தன. ஆனால் அவை காலியாக இருந்தன. “ஜாடிகளில் தண்ணீர் நிரப்புங்கள்” என்று இயேசு கூறினார்.


கற்காடிகளை வழிய தண்ணீர் ஊற்றினவுடன் இயேசு மறுபடியும் பேசினார்: “அதில் கொஞ்சத்தை எடுத்து இப்போது விருந்துக்குப் பொறுப்பாளனிடம் கொடுங்கள்.”

வேலைக்காரன் இயேசு சொன்னபடியே செய்தான். அவன் அதை ஊற்றினபோது அது திராட்சரசமாக இருந்தது. பொறுப்பாளன், “இன்று நாங்கள் குடித்த திராட்சரசத்திலேயே இதுதான் மிகவும் ருசியுள்ளதாக இருக்கிறது. நல்ல திராட்சரசத்தைக் கடைசிவரை காப்பாற்றிவைத்திருந்தாய்” என்றான்.


கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A        வீட்டுப்பாடம் - 18        **கானா ஊரில் கல்யாணம்**

பெயர் ..........................................................................................................



இயேசு தண்ணீரை நல்ல திராட்ரசமாக மாற்றியதை ருசித்தப்பிறகு ஜனங்கள் முகம் மலரும். சந்தோஷம் இருக்கும் முகத்தைச் சித்தரிக்கவும்.



கற்சாடிகளைச் சித்தரிக்கவும்.

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை 1A　　பாடம் - 18/2　　**கானா ஊரில் கல்யாணம்**

இயேசு தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினது அவனுக்குத் தெரியாது. ஆனால் அவனுடைய வேலைக்கராருக்குத் தெரியும். அவர் சீஷர்களுக்கும் அது தெரியும்.

இது இயேசு செய்த முதலாவது அற்புதம்.



நிலை 1A　　பாடம் - 19　　**ஐந்து சிநேகிதர்கள்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, தயவு செய்து இயேசு மறுபடியும் திரும்பி வந்து நோய்களால் அவதிபட்டு கொண்டிருக்கும் எல்லா ஜனங்களையும் குணப்படுத்த அவரை அனுப்பும். இயேசுவின் நாமத்தில் கேட்டுகொள்கிறோம், ஆமென்.

**பாடம் :** ஒரு நாள் இயேசு கப்பர்நகூம் என்ற இடத்திற்கு வந்தார். அங்கு ஒரு பிணியாளி வசித்து கொண்டிருந்தான். அவனுக்கு உடல் உறுப்புக்கள் திமிர்வாத நோயால் வாதிக்கப்பட்டு, வேலை செய்ய முடியாமல் சோர்ந்திருந்தான். அவன் இயேசுவின் போதனைகளைக் கேட்க மிகவும் ஆசையாய் இருந்தான். இயேசு இருந்த வீட்டிற்கு அவனால் போகமுடியவில்லை.

அவனுடைய சிநேகிதன் அந்த வீட்டு வழியாய் கடந்துபோனான்.

"இயேசு கப்பர்நகூம் ஊருக்கு வந்திருக்கிறார்" என்று அந்த நோயாளியிடம் கூறினான்.

அவனை இயேசுவிடம் கொண்டு போகும்படி வருந்தி கேட்டான். ஆனால் அவனுடைய சிநேகிதன் ஒருவனாய் அவனை எடுத்துச் செல்ல முடியவில்லை. அவன்போய் வேறு மூன்று நண்பர்களைக் கூப்பிட்டு அவன் படுத்திருந்த மெத்தையில் இயேசு இருக்கும் வீட்டிற்கு அவனைத் தூக்கிச் சென்றார்கள்.

அங்கு அவர்கள் போனபோது மிக பெரிய கூட்டமாக இருந்தது. அவர்கள் கதவு பக்கத்தில் போகவும் இடம் இல்லை.

நோயாளியிடம் "நாம் இப்போது என்ன செய்யலாம்?" என்று அந்த சிநேகிதர் கேட்டனர்.

அவர்கள் நோயாளியோடே வீட்டின் மேல் ஏறி தட்டோடுகள் வழியாய் ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள்.

இயேசு திமிர்வாதக்காரனை நோக்கி "நான் உன்னைக் குணமாக்க முடியும் என்பதை நீ விசுவாசிக்கிறாய் என நான் நம்புகிறேன்" என்றார்.


கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை 1A    வீட்டுப்பாடம் - 19    **ஐந்து சிநேகிதர்கள்**

பெயர் ........................................................................................................

இயேசு நோயாளியைக் குணப்படுத்தினார். அவன் தனது படுக்கை பாயைச் சுருட்டி எடுத்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான்.

பாயின் வர்ணமிடுக. அந்த மனிதன் தனது வீட்டுக்கு நடந்து போகும்படி அவனுக்குக் கால்கள் வரையவும்.




நிலை 1A  பாடம் - 19/2  ஐந்து சிநேகிதர்கள்

"ஆம், நான் விசுவாசிக்கிறேன்" என்று அந்த நோயாளி கூறினான்.

"அப்படியென்றால், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று யேசு சொன்னார்.

அந்த நோயாளியும் அவர் சொன்னபடியே செய்தான்.



கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை 1A பாடம் - 20 **கட்டடம் கட்டுபவர்கள் இருவர்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, தயவு செய்து எப்போதும் உம்மை நேசித்து பிரியப்படுத்தும்படி எங்களுக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

பாடம் : இரண்டு மனிதர்கள் வீட்டைக் கட்டினார்கள். இந்த இரு மனிதர்கள் வீடும் பக்கம் பக்கமாகவும் ஒரே விதமாகவும் இருந்தது. முதல் மனிதன் தனது வீட்டைக்கட்ட மிக நாட்கள் செலவழித்தான். பாறைகளைத் தோண்டி கெட்டியான அஸ்திபாரம் போட்டான். பின்பு வீட்டைக்கட்ட ஆரம்பித்தான்.

இரண்டாவது மனிதன் அஸ்பாரம் போடுவதைக் குறித்துக் கவலைப்படவில்லை. எனவே வேறும் மணலின் மீது கட்டினான். அந்த வீடு மிக சீக்கிரமாக கட்டி முடிந்தது.

பிறகு அந்த இரு மனிதர்களும் புது வீட்டிற்குள் சென்றார்கள். அவர்கள் இருவரும் அவைகளில் சந்தோஷமாகக் குடி இருந்தார்கள்.

ஒரு நாள் இரவு பலத்த காற்றும், மழையும் வேகமாக அடித்து, பெரு வெள்ளம் வந்தது.

முதல் மனிதன் தனது ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தபோது, மழையும் இடியுமாக இருந்தது. அவன் வீட்டை சுற்றிலும் சுழல்காற்று அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவனுக்குப் பயம் இல்லை. ஏனென்றால் தன் வீட்டைக் கன்மலையில் மேல் அஸ்திபாரம் போட்டுக் கட்டியிருந்தான். நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும் அதை அசைக்கக் கூடாமற் போ பிற்று.

மற்ற மனிதன் தனது ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தான். அவன் மழை கொட்டுவதைப் பார்த்து விசனமடைந்தான். ஏனெனில் மழைநீர் கொஞ்சம் கொஞ்சமாக அஸ்திபாரத்தின் கீழ் மணலை அரித்தது. பலத்த சுழல்காற்று அவன் வீட்டை அசைக்க ஆரம்பித்தது. நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்து முழுவதும் அழிந்தது.

டமார்!

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை 1A பாடம் - 20 **கட்டடம் கட்டுபவர்கள் இருவர்**

பெயர் ..........................................................................................................

ஞானமுள்ளவன் எந்த வீட்கைக் கட்டினான்?


ஞானமுள்ளவனிடமிருந்து அவன் கட்டின வீட்டிற்கு ஒரு கோடு வரைந்து இணைக்கவும்.


எந்த வீட்டை புத்தியில்லாதவன் கட்டினான்? புத்தியில்லாதவனுக்கும் அவன் கட்டின வீட்டிற்கும் கோடிட்டு இணைக்கவும்.












நிலை 1A பாடம் - 20/2 **கட்டடம் கட்டுபவர்கள் இருவர்**

"நாம் அவரில் அன்பும் நம்பிக்கையும் வைத்தால் கற்பாறையின்மேல் தன் வீட்டைக் கட்டின முதல் மனிதனைப்போல நாமும் பத்திரமாக இருக்கலாம்" என்று இயேசு கூறினார்.



நிலை 1A பாடம் - 21 **நாயீன் ஊரில் விதவை**

**ஜெபம் :** அன்புள்ள எங்கள் தேவனே, எங்கள் பெற்றோர்கள் எங்களைப் பாதுகாத்து வழி நடத்துவதற்காக இயேசுவின் மூலம் நன்றி. ஆமென்.

**பாடம் :** ஒருநாள் இயேசு தமது நண்பர்களுடன் பாதையில் சென்று கொண்டிருந்தார். மிக அதிகமான ஜனங்கள் அவருடன் பின்சென்று கொண்டிருந்தார்கள். ஏனென்றால் இயேசு என்ன சொல்ல போகிறார் என்று ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்தார்கள்.

அவர் நாயீன் என்னும் ஊருக்குச் சமீபமாய் வந்தார். அந்த ஊர் வாசல் அருகில் வந்தபோது எதிரில் வந்த கூட்டம் அதிகமாக இருந்தது.

மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள். அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான்.

இயேசு அவளைப் பார்த்து அவள் மேல் மனதுருகி, "அழாதே" என்று சொன்னார். அவள் அவரை ஆச்சரியத்துடன் அண்ணாந்து பார்த்தாள்.

இயேசு பாடையைத் தொட்டு "வாலிபனே, எழுந்திரு" என்றார். அந்த வாலிபன் உயிர்ப்பெற்று, கண்களைத் திறந்து, எழுந்து உட்கார்ந்தான். அவன் மறுபடியும் உயிர்பெற்றான்.

எல்லா ஜனங்களும் பயமடைந்து இயேசு இந்த அற்புதத்தைச் செய்தார் என்று வியப்படைந்தார்கள். "இந்த மனிதன் மறுபடி உயிருடன் இருக்கிறான்" என்று கூறினார்கள்.

எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. ஆனால், நீங்கள் நினைத்துப் பாருங்கள். அவர்கள் எல்லாரிலும் யார் மிக மிக மகிழ்ச்சியில் இருந்தார்கள்? ஆம், அந்த வாலிபனின் தாய் தான்.


அவள் இயேசுவுக்கு "நன்றி" என்று கூறினாள்.

**கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை**
**தனித்து இயங்கும் வேத பாடசாலை**

நிலை - 1A　　　　வீட்டுப்பாடம் - 21　　　　**நாயீன் ஊரில் விதவை**


பெயர் ..........................................................................................................


வாலிபன் மரித்தான். அவன் தாயின் முகத்தை விசனமாகச் சித்தரிக்கவும்.





இயேசு வாலினை உயிர்ப்பித்தார். அவன் தாயின் முகத்தைச் சந்தோஷமாகச் சித்தரிக்கவும்





**நிலை 1A** பாடம் - 22 **விதைக்கிறவனின் உவமை**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, தயவு செய்து எங்களுக்கு வேதாகம பாடத்தில் உள்ள கதைகளைக் கற்று, இயேசுவைப் போல் நல்ல பிள்ளைகளாக வாழ உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

**பாடம் :** ஒருநாள் இயேசு ஜனங்களுக்கு ஒரு கதையைக் கூறினார்.

ஒரு ஊரில் விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அப்போது வெயிற்காலமாக இருந்தது.

ஒரு பெரிய நிலத்தில் அவன் விதைத்த விதைகள் மிகவும் நல்ல விதைகளாக இருந்தன. நிலத்தின் சில பகுதிகளில் கற்கள் இருந்தன. அதன் ஓரத்தில் ஒரு பாதையும் இருந்தது.

விவசாயி தன் நிலத்தைப் பண்படுத்தினான். பின்பு காலையில் அவன் விதைகளை ஒரு கூடையில் போட்டு அதை விதைக்கச் சென்றான்.

அவன் அந்த நிலத்தில் மேலும் கீழுமாக நடந்து கொண்டே விதைகளை வீசி விதைத்தான்.

கடைசியில் அதை முடித்தான்.

சில பறவைகள் கீழே பறந்து வந்து பாதையில் இருந்த விதையைப் பட்சித்துப் போட்டது.

சில வாரங்கள் சென்று தேவன் வெயிலும் மழையும் அனுப்பினதால் விதைகள் முளைக்க ஆரம்பித்தன. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்து, மண் ஆழமாயிராததினாலே சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறின போது, தீய்ந்து போய் வேரில்லாமையால் உலர்ந்துப் போயிற்று.

முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதை வளர்ந்து முள் அதை நெருக்கிப் போட்டது. எனவே அதுவும் மடிந்தது.

நல்ல நிலத்தில் விழுந்த விதையோ நன்றாக ஓங்கி வளர ஆரம்பித்தது. அதற்கு மழை நீரும் கிடைத்தது. வெயிலும் அதற்குச் சத்து சேர்த்தது. அது நன்றாக வளர்ந்து நல்ல பலன் தந்தது.

இயேசுவின் போதனைகளைப்போல எல்லா விதைகளும் நன்றாக இருந்தது. ஆனால் அவை நல்ல நிலத்தில் விழும்போது மட்டும் பலன் கொடுக்கும். அப்படியே இயேசுவின் வசனத்தைக் கேட்பவன் அவரைப்போல நடப்பான். நல்ல விதையைப்போல பலன் தருவான்.

நான் அப்படியே முயற்சி செய்வேன். நீயும் முயற்சி செய்வாயா ?


கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 22 விதைக்கிறவனின் உவமை

பெயர் ..........................................................................................................

சரி என்று இருந்தால் (✓) தவறாக இருந்தால் (X) என்று குறியிடவும்


வழி அருகில் விழுந்த விதை வளர்ந்ததா ?




கற்பாறையின் மீது விழுந்த விதை வளர்ந்ததா ?



முட்செடியின் மத்தியில் விழுந்த விதை வளர்ந்ததா ?



நல்ல நிலத்தில் விதை வளர்ந்ததா ?



**கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை**
**தனித்து இயங்கும் வேத பாடசாலை**

நிலை 1A பாடம் - 23 **5000 பேரைப் போஷித்தல்**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, ஒவ்வொரு நாளும் எங்களுக்கு ஆகாரத்தைக் கொடுத்தற்காக இயேசுவின் நாமத்தில் நன்றி. ஆமென்.

**பாடம் :** மிக அதிகமான ஜனங்கள் இயேசுவைப் பின்பற்றி சென்றார்கள். ஏனென்றால், இயேசு கூறும் வார்த்தைகளை கேட்க விரும்பினார். ஆனால் இயேசுவும் அவர் சீஷர்களும் மிகவும் களைப்பாய் இருந்தார்கள். அவர்கள் கப்பல் ஏறி, கலிலேயா கடலின் அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்கு வந்தார்கள். அங்கு அவர்கள் இளைப்பாறினார்கள்.

ஆனால் பெரிய ஜனக்கூட்டம் இயேசு கப்பலில் ஏறினதைப் பார்த்தார்கள். எல்லாரும் அவரை பின்தொடர்ந்து கடற்கரை வழியாக சுற்றி நடந்து அங்கு வந்து சேர்ந்தார்கள்.

அன்று வெயில் மிகவும் அதிகமாக இருந்தது. ஜனங்கள் எல்லாரும் களைப்பாய் இருந்தார்கள். இயேசு அவர்கள் மீது மனதுருகி, எழுந்து நின்று, தேவனையும் இயேசுவின் ராஜ்ஜியம் பூமியில் வருவதையும் பற்றி எடுத்துக் கூறினார். அதை அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிறகு இயேசு பேசுவதை நிறுத்தி, “நாங்கள் எங்கு போய் அப்பத்தை வாங்கி ஜனங்களுக்கு கொடுக்கலாம் ?” என்று பிலிப்புவைக் கேட்டார். அவர்களுக்கு வேண்டிய அப்பம் ஐந்து ஆயிரம் ஜனங்களுக்குக் கிடைக்காது என்று பிலிப்புவுக்குத் தெரியும்.

இயேசுவின் மற்றொரு சினேகிதனான அந்திரேயா அங்கு இருந்தான். அவன், “இங்கு ஒரு சிறுவனிடம் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களும் இருக்கிறது” என்றான்.

இயேசு அவனைப் பார்த்து நகைத்தார்.

பிறகு எல்லாரையும் பசும்புல்லின் மேல் பந்தியிருக்கும்படி கட்டளையிட்டார். அப்படியே அவர்கள் உட்கார்ந்தார்கள். அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துப் பார்த்து, தேவனிடம் நன்றிகூறி, அப்பங்களைப் பிட்டு, மீன்களையும் எல்லாருக்கும் பங்கிடச் சொன்னார்.

எல்லாரும் திருப்தியடையும் வரை சாப்பிட்டார்கள்.

மேலும் அப்பங்கள் மற்றும் மீன்களில் மீதியான துணிக்கைகளை மீன் கூடைகள் நிறைய எடுத்தார்கள். உங்களுக்குத் தெரியுமா ? எத்தனை கூடைநிறைய எடுத்தார்கள் ?

பன்னிரண்டு மீன் கூடைகள் நிறைந்தன.


இயேசு இந்த அற்புதமான காரியத்தைச் செய்ததினால் ஜனங்கள் அவருடைய சுவிசேஷத்தைக் கேட்டார்கள்.

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A　　வீட்டுப்பாடம் - 23　　**5000 பேரைப் போஷித்தல்**

பெயர் ....................................................................................................

இரண்டு மீன்களைச் சித்தரிக்கும் புள்ளிகளை ஒன்று சேர்க்கவும் எத்தனை அப்பங்கள் இருக்கிறது என்று சித்தரிக்கவும்.



**கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை**
**தனித்து இயங்கும் வேத பாடசாலை**

நிலை 1A        பாடம் - 24        **இயேசு கடலின் பெருங்காற்றை அடக்கியது**

**ஜெபம் :** அன்புள்ள தேவனே, தயவு செய்து எப்போதும் எங்கள் கூடவே இருந்து எங்களுக்கு உதவி செய்ய இயேசுவின் நாமத்தில் வேண்டிகொள்கிறோம். ஆமென்.

**பாடம் :** ஜனங்களுக்குப் போதித்தப்பிறகு, இயேசுவுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. அதனால் இயேசு ஜனங்களிடம் கூறினார், "பொழுது போகுமுன் வீடு செல்லுங்கள்."

பேதுருவிடம் கூறினார், "நாம் இப்போது மறுகரைக்குப் போகலாம்" என்றார்.

அவர்கள் படகில் ஏறி மறுகரைக்குக் கடந்துப் போனார்கள். இயேசு களைப்பினால் தூங்கி விட்டார். அவர்கள் கடலைக் கடந்து சென்றுக் கொண்டிருக்கையில் மிகப்பெரிய சுழல் காற்று அடித்தது.

கப்பல் நிறைய தண்ணீர் உள்ளே வந்தது. அதனால் கப்பல் மூழ்கி விடும் என்று அவர்கள் மிகவும் பயந்தார்கள். ஆனால் இயேசு இன்னும் உறங்கிக் கொண்டிருந்தார்.

பேதுரு கதறினான், "எழுந்திரும் ஆண்டவரே, உதவி செய்யுங்கள். நாம் எல்லோரும் மூழ்கப்போகிறோம்". இயேசு எழுந்திருந்தார்.

அவர் சுற்றிப் பார்த்து, பலத்த காற்றையும் ராட்சத அலைகளையும் அவர்கள் அண்டையில் வருவதைக் கண்டார்.

இயேசு எழுந்து நின்று, தமது சிநேகிதர்களைப் பார்த்துக்கொண்டு தம்முடைய கையை நீட்டினார். "சாமாதானம்" என்று அவர் பெருங்காற்றைப் பார்த்து கூறினார். அலைகளை அதட்டி அடக்கினார்.

உடனே, காற்றும் அலைகளும் அடங்கி அமைதியாயின. இயேசு தமது சிநேகிதர்களைப் பார்த்து, "ஏன் நீங்கள் பயந்தீர்கள் ? தேவன் எல்லாரையும் காப்பாற்றுவார்" என்றார்.

இயேசுவின் சிநேகிதர்கள் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். "இவர் எந்தவிதமான மனிதனாக இருப்பார் ? பெருங்காற்றும், அலைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறது" என்று ஒருவருக்கொருவர் இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

கிறிஸ்டடெல்ஃபியன் திருச்சபை
தனித்து இயங்கும் வேத பாடசாலை

நிலை - 1A வீட்டுப்பாடம் - 24 இயேசு கடலின் பெருங்காற்றை அடக்கியது

பெயர் ........................................................................................................

கப்பலை வர்ணம் பூசுக

பெரிய அலைகளைக் கப்பலின் கீழ்ப்பகுதியில் சித்தரிக்கவும்.

